# பாதுகாவலன்
PATHUKAVALAN

**இவ்வார விநியோகம் 1**

| | |
|---|---|
| பாஷையூர் பங்கு | 380 |
| யாழ். சென் ஜேம்ஸ் | 350 |
| யாழ். பேராலயம் | 289 |
| கரம்பொன் பங்கு | 272 |
| இளவாலைப் பங்கு | 264 |
| அச்சுவேலிப் பங்கு | 260 |
| பருத்தித்துறை பங்கு | 260 |
| சில்லாலைப் பங்கு | 225 |
| நெடுந்தீவு பங்கு | 201 |
| மன்னார் பேராலயம் | 192 |
| வங்காலை பங்கு | 185 |
| பாண்டியன் தாழ்வு | 175 |
| மண்டைதீவு பங்கு | 173 |
| நாவாந்துறைப் பங்கு | 150 |
| மொத்தப் பிரதிகள் | 7215 |

RECEIVED
Library

மலர்: 115 இதழ் : 29    11-8-1989    (ஆகஸ்ட் 11 — ஆகஸ்ட் 18)    ரூபா 1-50    இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

அ. ம. தி. சிரேஷ்டர் அதி. வண. மார்சலோ சாகோவுக்கு யாழ்நகரில் 23 ஆம் திகதி வரவேற்பு:

# அமலமரித் தியாகிகள் தலைவர் கொழும்புக்கு வந்துள்ளார்கள்

**அமலமரித் தியாகிகளின் உயர் தலைவர் அதி. வண. மார்சல்லோ சாகோ அவர்கள் இம்மாதம் 6ஆம் திகதி கொழும்பு வந்துள்ளார். எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தை மேற்கொள்ளும் அவர் 23 ஆம் திகதி பி. ப. 4-30க்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் சிறப்பாக வரவேற்கப்பட்டு கூட்டுத்திருப்பலியில் பங்குகொள்வார்.**



Most. Rev. Fr. Marcello Zago
Superior General - O. M. I.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமலமரித்தியாகிகள் சபையின் தலைவர் அதி. வண. மார்சல்லோ சாகோ, அ. ம. தி. இம்மாதம் 28 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

பிரான்சிலிருந்து முதன் முதல் 1847 இல் அமலமரித் தியாகிகள் இலங்கையின் பணி புரிவதற்காக வந்தனர்.

1986 இல் புதிய சபைத்தலைவராக நியமிக்கப்பட்ட அதி. வண. சாகோ அடிகள் இத்தாலியராவார்.

லாவோஸ் கம்போடியாவில் நீண்டகாலம் பணியாற்றி பௌத்த மதத்தைப் பற்றி நன்கு பாண்டித்தியம் பெற்றூர். 1973 க்குப் பின் வத்திக்கானில் மதங்களுக்கிடையே கலந்துரையாடலுக்கான செயலகப் பொறுப்பாளராகப் பணியாற்றினர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வடமாநில அமலமரித்தியாகிகளையும், பிற குருக்களையும், மக்களையும் தரிசிக்கவரும் அவர் 23 ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் சிறப்பாக வரவேற்கப்படுவார். இவரது வருகையையொட்டிய சிறப்பிதழ் வெளிவரவுள்ளது.

## சோமாலிய ஆயர் கொலை

சோமாலியா நாட்டு ஆயர் பேரருள்திரு பியெற்றோ சல்வதோரூர் கொலம்போ (வயது 66) இனந்தெரியாத துப்பாக்கி நபரால் ஜூலை 9 அன்று கொலைசெய்யப்பட்டார். சோமாலியாவின் தலைநகர் மொகாடிஷ்யு பேராலயத்தில் மாலைத்திருப்பலிஆற்றிவிட்டு வெளியே வந்த ஆயரை எதற்காகக் கொலைசெய்தனர் என்பது தெரியவில்லை.

இஸ்லாமியரைப் பெரும்பான்மையாகக்கொண்ட ஆபிரிக்க நாடான சோமாலியாவில் 1947 முதல் பணியாற்றி வந்த இத்தாலியரான பிரான்சிஸ்கன் சபை மறைபோதகக்குரு 1976இல் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு, மக்களால் வெகுவாக அன்பு செய்யப்பட்டு அரும் பணியாற்றி வந்தார். 47 லட்சம் மக்களைக்கொண்ட சோமாலியாவில் 2000 கத்தோலிக்கர் 2 பங்குகளில் உள்ளனர். சோமாலிய ஜனாதிபதி திருத்தந்தைக்கு அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளதுடன் கொலைபற்றிய தகவல் தருவோருக்கு பத்தாயிரம் டொலர் சன்மானமும்அறிவித்துள்ளார்.

## அருட்சகோ. சூசைதாசன் C. R. அவர்களின் மறைவு

தோலகட்டி செபமாலைத் தாசர் சபையின் மூத்த சகோதரர்களுள் ஒருவரான அருட்சகோ. சூசைதாசன் C. R. அவர்கள் 28-7-1989 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார். 29-ம் திகதி சனிக்கிழமை மாலை 3-30 மணிவரை அவரது உடல் யாழ். அருள் ஆச்சிரமத்தில் நற்கருணை நாதர் நாதர் ஆலயத்தில் வைக்கப்பட்டு திருப்பலிகளும் செபங்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அன்று மாலை 3.30 மணிக்கு தோலகட்டி செபமாலை தாசர் ஆச்சிரமத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுஞாயிறுகாலை நல் அடக்கப் செய்யப்பட்டது.

## புனித இஞ்ஞாசியாரினது பிறப்பின் 500வது ஆண்டு விழா

தெற்கு ஆசியாவில் உள்ள இயேசு சபையினர் புனித இஞ்ஞாசியாரது பிறப்பின் 500 ஆவது ஆண்டு நிறைவையும், தமது சபை நிறுவப்பட்டதன் 450 ஆவது ஆண்டு நிறைவையும் கொண்டாட இருக்கின்றனர். இச்சபை 1540ஆம் ஆண்டு திருத்தந்தை 3 ஆம் சின்னப்பரால் அங்கீகரிக்கப்பட்டது. ஜுபிலி விழா

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## மேய்ப்புப்பணிச் சங்கம் ஊழல்களைக் கண்டிக்கிறது

பணுஜியில் இடம் பெற்ற மறை மாவட்ட மேய்ப்புப் பணிச் சங்கத்தின் கூட்டத்தில் பொதுவாழ்வில் ஒரு குடிமகனின் பங்குபற்றி ஆராயப்பட்டபோது. காலங்காலமாக கோவை மக்கள் போற்றிவரும் சமூக மதிப்பீடுகளான உண்மை, நேர்மை ஆகியவற்றைக் கெடுத்து சமுதாயத்தை விழுங்கிவரும் ஊழல்கள்மீதும் சிறப்பாக கவனம் செலுத்தப்பட்டது. தீய சக்திகளை எதிர்க்க முன் வருமாறு அனைவரையும் கேட்டுள்ளது.

## குருவாக மாறிய நாஸ்திகர்

பிளெசென் கருநாகப்பள்ளி ஒரு தீவிர நாஸ்திகர். எல்லாவற்றையும் பகுத்தறிவு ரீதியாக ஆராய்ந்தவர். அத்துடன் சமயத்தை எதிர்ப்பதற்கு தீவிரமாக உழைத்தவர்.

வேதாகமம் ஒரு கட்டுக் கதையென்று விமர்சித்தவர். மகரம் பண்டிகைக்காக

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## வத்திக்கான் வேண்டுகோள்

ஈரான் ஆதரவிலான முஸ்லிம் இராணுவப்பிரிவான ஹிஸ்புல்லா இயக்கம் இஸ்ரேலிய வீரர்கள் கைதுசெய்த தமது தலைவர் ஷேக் அப்துல் கரீமை விடுதலை செய்யாத காரணத்தால் தூக்கிலிட்ட பணயக்கைதி, லெபனானில் அமெரிக்க இராணுவ அதிகாரியாக இருந்த, லெப்டினன்ட் கேர்ணல் வில்லியம்ஸ் ஹிக்கின்ஸ் உடைய உடலை குடும்ப அங்கத்தவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும்படி வத்திக்கான் பெய்ரூட்டிலுள்ள சிரேஷ்ட ஆயர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# எம்கருத்து

## "கிறிஸ்துவே எமது சமாதானம்"

தென்கொரியாவின் தலைநகர் சோல் இல் 44-வது சர்வதேச நற்கருணை மகாநாடு ஒக்ரோபர் 5—8 திகதிகளில் "கிறிஸ்துவே எமது சமாதானம்" என்ற கருப்பொருளைக் கொண்டதாக நடைபெறுவது வாசகர்கள் அறிந்ததே.

வட கொரியாவும் தென் கொரியாவும் திரும்பவும் ஒன்றுசேர முற்படுகின்ற இக்கால கட்டத்தில் மக்கள் விரும்பித் தேடும் சமாதானத்தை கிறிஸ்துவே தரவல்லவர் என்ற கருத்தை வலியுறுத்தி நற்கருணை மகாநாட்டுக்கான கருப்பொருள் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி குருநாகலில் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேசிய நற்கருணை மகாநாடு நாட்டு நிலைமைகள் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளமை நமது நாட்டு அவநம்பிக்கை நிலையை விளக்குகின்றது.

தென் கொரியாவில் 5·76 வீதம் கத்தோலிக்கர் வாழுகின்றனர். 2,468,082 தென் கொரிய கத்தோலிக்கரும் எதிர்வரும் சர்வதேச நற்கருணை மகாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் ஆர்வமாக உழைத்து வருகின்றனர்,

நூறு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கு கொள்ள இருக்கும் இந்த நற்கருணை மகாநாட்டிற்கு ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் அனுப்பப்படவுள்ளனர். அதற்கான செலவுகள் அனைத்தையுமே கொரியத் திருச்சபை ஏற்க விருக்கிறது,

நாலரை லட்சம் அமெரிக்க டொலர் செலவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மகாநாடு நடைபெறவுள்ள தலைநகர் சோல் மறைமாவட்டம் செலவில் ஆறில் ஒரு பகுதியைப் பொறுப்பேற்கிறது, அரைப் பங்கு மிகுதியான மறைவட்டங்களிலிருந்து பெறப்படுகின்றது. மிகுதி செல்வந்தர்களின் நன்கொடையாலும், நினைவுச்சின்னங்களின் விற்பனையாலும் பெறப்படவுள்ளன.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தங்குமிடவசதி செய்துகொடுக்க ஆயிரம் குடும்பங்கள் முன்வந்துள்ளதால் எதுவித செலவுமின்றி விருந்தினர்கள் கொரிய மக்களின் இல்லங்களிலே தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

"கிறிஸ்துவே எமது சமாதானம்" என்ற கருப்பொருளை சர்வதேச நற்கருணை மகாநாட்டில் கருப்பொருளாகத் தெரிந்தெடுத்த கொரியத் திருச்சபை இவ்வாண்டுக்காக தமது மறைப்பணிக் கருப்பொருளாக "நற்கருணை மூலம் ஒருமைப்பாட்டை எய்துதல்" என்ற தலைப்பைத் தெரிந்தெடுத்து அதனை நடைமுறைப்படுத்த முயன்று வருகின்றது.

நற்கருணை மூலம் ஒருமைப்பாட்டை எய்தும் முயற்சி சமூக வாழ்வில் அங்கு வெளிக்காட்டப் பட்டுள்ளது. தன்னிச்சையாகவே அங்கு ஏழு தேசிய சமூகப் பணி இயக்கங்கள் உருவாகியுள்ளன. அவை சாதாரணமக்கள் மட்டத்துக்கு இறங்கிவந்து குருக்களும் பொது நிலையினரும் ஈடுபாடுகொண்ட சமூக சேவைப்பணிகளாகச் செயல்வடிவம் பெற்றுள்ளன.

உணவுப் பண்டங்களைப் பகிர்ந்து கொள்ளல், இரத்ததானம், உறுப்புதானம், அநாதைகளுடன் குடும்ப வாழ்வைப் பகிர்தல் போன்ற செயல்கள் கொரியத் திருச்சபையின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுவதாக மகாநாட்டு செயற்குழு உறுப்பினர் அருள்திரு. ஒசே வான் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நற்கருணை மகாநாட்டின் கருப்பொருள் நமக்குப் புறம்பானதல்ல. நாமும் அதில் அங்கம் வகிக்கின்றோம் என்ற உணர்வில் இலங்கைத் திருச்சபையும். செயல்படவேண்டும். அவநம்பிக்கையைப் போக்கி, நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# தேனருவி

### ஆண்டின் 20-ம் ஞாயிறு (20—08—89)

## அமைதிக்கு வழி உண்மை

சந்தைக்குச் சென்றுள் ஒரு வீட்டுக்காரி. அங்கு யேசுநாதர் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். வாழ்வுக்குத் தேவையானதெல்லாம் விற்பனைக்குண்டு என்றார் யேசு! அந்தப் பெண்ணோ, ஆண்டவரே, என் மனதுக்குச் சமாதானமும், சந்தோஷமும், நிறைவும் தாருங்கள். ஆண்டவரே, எனக்கு மட்டுமல்ல என் கூடும் பத்தினருக்கும், எல்லா மனிதருக்கும் தாருங்கள் என்றாள். அதற்கு யேசு, "இங்கு கனிகள் அல்ல விதைகள் தானம்மா விற்பனைக்குண்டு" என்றார்.

விதைக்காமல், வளர்க்காமல், காய்களுக்காய் காத்திருக்காமல் கனிகளைப் பறிக்க விரும்புகிறதே சமுதாயம், சமாதானம், சந்தோஷம் என்பவற்றை உழைக்காமலே பெற விரும்புகிறது. மகிழ்ச்சி, அமைதி, நிம்மதி என மனிதன் தேடும் நிறைவான அனுபவம் அவனது உரிமைச் சொத்தாகும். ஆயினும், அதைப் பெற அவன் செய்யும் முயற்சியும், கொடுக்கும் விலையும், தெரிவு செய்யும் பாதையும் தான் பெரும் கேள்விக்குறிகளாகின்றன.

சமாதானமென்றால் யூதமரபில் போர் இல்லாமை, பிரச்சினை, குழப்பங்களைத் தவிர்த்தல் என்ற எண்ணம் அவர்கள் அடிமனதில் வளர்ந்தது. பாபிலோனியருக்குத் திறைகொடுக்க மறுத்து அந்நியரான எகிப்தியருடன் நட்புக் கொண்டு குறுக்குவழியினால் அமைதியைக் காக்க விரும்பினர். ஆனால் எரேமியாஸ் அது தவறு என்று சுட்டிக் காட்டினார். பிரச்சனையை விட்டு ஓடுவது அல்ல, அவற்றை இறைவன் துணையுடன் எதிர்த்து நிற்க வேண்டுமென்றார். உண்மையில் பிறக்கும் அமைதி நியாயமானதெனக் குரல் கொடுத்தார். "உண்மைக்கு காலமில்லை என்பர்." அவர் குரல் செவிடன் காதில் ஊதிய சங்கானது. யூத குலம் குற்றுயிரானது. யெருசலேம் தேவாலயமும் புனித நகரமுமே அழிக்கப்பட்டன. உண்மை வழியைக் காட்டிய இறைவாக்கினர் எரேமியாஸ் பாழுங் கிணற்றில் தள்ளிவிடப்பட்டார். அவருக்கு அம்மக்கள் வரவழைத்த பல தீமைகளுள் இதுவும் ஒன்று.

யேசுவும் தான் கொணர்ந்த அமைதி ஒரு வித்தியாசமானது என மொழிந்தார். பாரம்பரியத்தின் பிடியிலும், சட்டத்தின் சிறையிலும், சுயநலத்தின் வேலிகளுக்குள்ளும், கிடைத்த போலி அமைதிகளுக்கு சாவு மணி அடித்தார். அவர் முன்வைத்த புதிய கருத்துக்கள் அவற்றினூடாக பிறக்கும் மாற்றங்கள், சீர்திருத்தங்கள், விலையாகக் கொடுக்கும் தியாகங்கள் ஊடாகவே அமைதித்திவலைகள் உண்டாகும் என வலியுறுத்துகிறார். நாம் சமாதானத்தை அல்ல பிரிவினையை உண்டாக்க வந்தேன் என்ற குழம்பிய வார்த்தையினூடாக உணர்த்தினர்.

அன்பு என்பது வெறும் பொறுப்பற்ற, வரையறையற்ற சுதந்திரவாழ்வு அல்ல; சவால்களும், தியாகங்களும் மெல்ல குழப்பங்களை உருவாக்கினாலும் அவைதான் அமைதிக்கு வழி.

உண்மை சுடும். பொய்யும் களவும், ஊழல்களும், பாரபட்சமும் கொஞ்சம் இன்பத்தைத் தந்தாலும்; உண்மை காத்திருந்து சாகாத அமைதியைத் தரும்,

காக்காய் பிடிப்பவரும், காட்டிக் கொடுப்பவரும், கட்சி மாறுபவரும் சிறு காலத்துக்கு செல்வாக்கையும் அதனால் வரும் சுகத்தையும் அனுபவிக்கலாம். ஆனால் உயர்மதிப்பீடுகள் உண்மையான அமைதியின் மைல்கற்களாகும்.

வாழ்வு ஒரு போராட்டம், எதிர்நீச்சல். எனவே மனவுறுதியோடு இலக்கை நோக்கி ஓடவேண்டும். இரத்தம் சிந்தினும் உயர் இலட்சியத்தை கைவிடக்கூடாதென்பது புனித சின்னப்பரின் அறிவுரை.

சுவாமி ஜீவா போல் அ. ம தி.

---

ஒரே 38: 4-6, 8—10. பாழுங் கிணற்றில் இறங்கிவிட்டார்கள்.
எபி. 12: 1—4 மனஉறுதியோடு ஓடுவோம்.
லூக். 12-4-53 பிரிவினை உண்டாக்க வந்தேன்.

---

## கிளிநொச்சி குழந்தை யேசு ஆலய கட்டிட நிதி அதிஷ்டலாபச் சீட்டு

15-8-1989 அன்று அதிஷ்டம் பார்க்கப்பட இருந்த, மேற்படி சீட்டிழுப்பு 14-01-1990 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

பங்குத்தந்தை
கிளிநொச்சி

---

### விண்ணக வாழ்வின் 31-ம் நாள் அன்பின் நினைவு



இராயப்பு கிறகறி
(செல்வரெட்ணம்)

மலர்வு: 30–5–1922 உதிர்வு: 14–7–1989

எம்மை விட்டு பிரிந்த
அன்புத் தந்தையே
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14-8-89 ம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 5-30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் உறவினர்கள்.

புதுமைமாதா கோவில்
கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம். A/169

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



செசிலியம்மா (முத்தம்மா)
ஆசிர்வாதம்

தோற்றம்: 24–7–1914 மறைவு: 23-8–1985

எங்கள் அன்புத்தாயே! நீர் எங்களை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் நான்கு கடந்துமென்ன, எங்கள் ஊனக்கண்களுக்கு நீர் தோன்றாவிடினும் ஞானக் கண்களுக்கு என்றும் தோன்றியே வருகின்றீர்.

இவரின் ஆன்மசாந்திக்காக 23-8-89 காலை 6 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் அன்பர்களை இவருக்காக, மன்றாடிக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
14/2. கோயில் வீதி
A/170 யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத்தளங்களில்...

## இளவாலையில்

இளவாலையில் புனித யாகப்பர் திருநாள் சென்ற ?5-7-89 இல் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவிழாத் திருப்பலி நிறைவேற்றி அதில் இறைமகன் இயேசுவுடன் புனித யாகப்பர் எப்படி வாழ்க்கை வாழ்ந்து காட்டினாரோ அதே வாழ்க்கையை நாமும் வாழவேண்டுமென்று அருள்தந்தையால் மறையுரை வழங்கப்பட்டது. நவநாட்களின்போது அப்பங்கில் உள்ள சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள், மற்றும் அன்னையர்களுக்குமான கலந்துரையாடல்கள் அருள்தந்தை நீக்கிலசினால் நடத்தப்பட்டு அவர்களின் வாழ்க்கை அமையவேண்டிய முறைபற்றி எடுத்துரைக்கப்பட்டது.

தகவல்:
அ. கலிஸ்ரா சிரோன் நிர்மலா

★

## உயிலங்குளம்

உயிலங்குளப்பங்கிலுள்ள பரப்பாங்கண்டல் கார்மேல் அன்னையின் திருவிழா ஆடி மாதம் 16 ஆம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆயத்த வழிபாடுகள் 13 ஆம் திகதி ஆரம்பமாகிய போது அருள்திரு. இராயப்பு அடிகளார் "இன்றைய கிறிஸ்தவன் எவ்விதம் விசுவாசத்திற்கு எதிரான சவால்களை எதிர்நோக்கவேண்டும்'' என்ற பொருளில் இறைவார்த்தைக்கு விளக்கம் கொடுத்தார். அடுத்த நாள் காலையில் பங்கிலுள்ள இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் 'தலைமைத்துவம்' பற்றிய கருத்தரங்கை அருள்திரு. போல் நட்சத்திரம் அ ம. தி அடிகளார் நடத்தினார். மாலையில் பெற்றோர்களுக்கான கலந்துரையாடலை அருள்திரு. அருள்நாதன் அ. ம. தி. அடிகளார் நடத்தினார்.

திருவிழாத் திருப்பலியில் அருள்திரு. கிறிஸ்ரியன் வாஸ் எமது நாட்டிற்கு விரைவில் அமைதியும், சமாதானம் கிடைத்து நாட்டு மக்களெல்லாம் ஒற்றுமையாக வாழ அன்னையிடம் விசேஷமாக மன்றாடும்படி வேண்டுகோள் விடுத்தார். அன்னையின் திருச்சுரூப ஆசீரை பங்குத்தந்தை அருள்திரு ஸ்ரனிஅன்ரனி அ ம. தி. அளித்தார். பதட்டமான சூழ்நிலையிலும், எவ்வித இடையூறுமின்றி திருவிழா சிறப்பாக நடந்து முடிந்தமைக்காக மக்கள் அன்னைக்கு நன்றி கூறியதுடன் விழா நிறைவெய்தியது.

தகவல்: ராஜினி சந்தியோகு
பரப்பாங்கண்டல்

★

## செட்டிகுளத்தில்

மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனமானது செட்டிகுளப் பங்கின் வாழ்வுதயக்கிளை ஊடாக, செட்டிகுளப் பங்கிலுள்ள கிராம மக்களின் பல்வகையான முழு மனித வளர்ச்சிப் பணிகளில் அக்கறை கொண்டு திறம்பட பணியாற்றி வருகின்றது. பொருளாதார வளர்ச்சி மாத்திரமல்ல அரசியல் பொருளாதார வளர்ச்சியுடன் இனமத வேறுபாடின்றிப் பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இந்நிறுவனமானது. செட்டிகுள உதவி அரசாங்க பிரிவிலுள்ள அதிகமான கிராம மக்களுக்கு தன்னாலியன்ற உதவிகளை வழங்கி வருகின்றது.

செட்டிகுளப் பங்கின் வாழ்வுதயக் கிளை ஸ்தாபனத்திற்கு உதவி வழங்கும் கழகங்களாவன; யாழ். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேரடியாகவே பண உதவி செய்கின்றது. நொரூட் (நோர்வே), செபேமோ (ஒல்லாந்து) ஆகிய இரு ஸ்தாபனங்களும், இளை ஸ்தாபனத்திற்கு மன்னார் வாழ்வுதயத்தின் ஊடாக பண உதவியை வழங்கி வருகின்றன.

தகவல்:-
செல்வி. மேரி அகஸ்ரீன்

★

## மட்டுநகரில்

ஆனித் திங்கள் 17 ஆம் நாள் காலை 7.00 மணிக்கு தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா ஆலயத்தில் இலங்கை வங்கி இலங்கையில் உருவாகிய 50 ஆம் வருட நிறைவை பொன்விழாவாகக் கொண்டாடியது. ஆயர் எல். ஆர். அன்ரனி ஆண்டகை தலைமையில் இயேசு சபை முதல்வர் அருள்திரு. போல் சற்குணநாயகமும் அருள்திரு. பங்குத்தந்தைஜே. அரசரெத்தனமும், இணைந்த கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர். வங்கி ஊழியர்களால் 50 ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது பலி நிறைவின் பின், சிறுர்களுக்குச் சிற்றுண்டி வழங்குதலும், நன்றி நவிலலும் இடம்பெற்றது.

தகவல்: (ஐ. தேவசகாயம்)
மட்/தாண்டவன்வெளி
பரிசுத்த வியாகுலமாதா
மேய்ப்புப் பலிச்சபை.

★

## மன்னார் மாதர் ஒன்றியம்

எமது மாதர் ஒன்றியத்தினால் பாதிக்கப்பட்ட மாதர்களுக்கென பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக கடந்த 18-6-89 போயா தினத்தன்று 20 க்கும் மேற்பட்ட கிராமிய மாதர் சங்கங்கள் தங்களது உற்பத்திப் பொருட்களான கைப்பணி விவசாயம், கால் நடை, மீனவ பொருட்களை கண்காட்சிக்கும் விற்பனைக்கும் கொண்டு வந்திருந்தனர். இந்நிகழ்ச்சி புனித செபஸ்தியார் பேராலய வளவில் நடைபெற்றன. அத்துடன் விறகுவெட்டி உழைக்கும் தாய்மாருக்கான உபகரணங்கள் அன்று வழங்கப்பட்டன. இவர்கள் நாளாந்தம் அருகில் உள்ள காடுகளுக்குச் சென்று விறகை வெட்டி அவற்றை நாள் ஒன்றிற்கு 30/-ருபாவிற்கு விற்று நாளாந்த சீவியததை நடத்துகின்றனர். மேலும் ஆடிமாதம் (8-7-89) சனிக்கிழமை இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய பின்தங்கிய மாணவ, மாணவிகளை கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்க்கான பயிற்சி வகுப்பு புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் மாதர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 45-க்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இப்பணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (யாழ்ப்பாணம்) சிறுவர் பாதுகாப்பு நிதியம் (கொழும்பு) போன்ற ஸ்தாபனங்கள் நிதி உதவி வழங்கின.

இது சம்பந்தமாக ம. து ம. ச மாதர் தொடர்பு அதிகாரி திருமதி வசந்தா அரியசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் மாதர் பணியகம் அமைக்கப்பட்டபின் கிராமங்களில் உள்ள மாதர்கள் பலசுய வேலை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் பலரின் உதவியுடன் அலுமீனிய தடங்கள், விடத்தல்தீவு பள்ளமடு, கூரூய், கள்ளிஅடி, வெள்ளாங்குளம். அந்தோனியார் புரம், தேவான்டுபட்டி போன்ற கிராமங்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும் துயர் துடைப்புச் சங்கத்தின் உதவியுடன் அந்தோனியார் புரம், கத்தாளம்பிடடி, பரவைக்கடல் போன்ற கடலை அண்டிய பிரதேசங்களுக்கு மாதர் சங்கங்கள் மூலம் குடிநீர் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாதர் ஒன்றிய தொடர்பு
அதிகாரி—மன்னார்

★

## மன்னாரில்

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் 4—ம் ஆண்டு பொதுக்கூட்டம் மன்னார் அல் அஸ்ஸார் மகாவித்தியாலயத்தில் 19-8-1989 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறும்.

மங்கள விளக்கேற்றல்-சர்வ மத குருக்கள். போஷகர்கள் பிரதம அதிதி, தலைவர். மௌன அஞ்சலியும் சர்வமத பிராத்தனையும். வரவேற்பு உரையும் தலைமை உரையும்— வண. பிதா. அ சேவியர் குரூஸ், தலைவர். சென்ற கூட்டறிக்கை வாசித்தல் — திரு. பி. கே. செல்வராஜா, உப செயலாளர். 1988-ம் ஆண்டறிக்கை — திரு. சின்கிலேயர் பீற்றர், செயலாளர். 1988-ம் ஆண்டு கணக்கறிக்கை - திரு. பசில் பெனடிக்ற், பொருளாளர் பிரதம அதிதி உரை திருத்திய அமைப்புவிதிகள் பொது சபையால் ஏற்றுக்கொள்ளல் புதிய நிர்வாக சபை தெரிவு முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

தகவல்: செல்வி, ம. ஆ. ம. ச.

## தயைசெய் தாயே

கவிதைநலந் தேனுகக் கனிந்தே பொங்கிக்
கன்னிமையைக் கற்பழகைப் பாடிப்பாடிப்
புவியினிலே கரைகாண முடியாதாகிப்
பூரிக்குந் திருமரியே அம்மாதாயே!
செவிகுளிரும் நின்நாமக் கீர்த்தி யெங்கும்
சிந்தையெலாம் இனித்திடவே செபிக்குந் தூயோர்
தவிதவிப்பே அறியாது வாழ்வா ரென்ற
தத்துவத்தை உணர்ந்துயரத் தயைசெய்யாயோ?

யாழ் — ஜெயம்

## சிந்திக்க மாட்டாயா?

ஓ ............ மனிதா!
வாழும் உயிர்களைப் போக்குவது - இந்த
உலகத்தில் யாவர்க்கும்
எளிதான செயல் - ஆனல்
வீழும் உடலை
உயிர் ஈந்து எழுப்புதலை
வேந்தன் நினைத்தாலும்
நடவாது.
எவரும் விரும்புவது — தமது
இனிய உயிரையே.
பேணிக் காப்பதும் — அந்த
இனிய உயிரையே.
ஊர்ந்து செல்லும்
எறும்பு கூடத் - தன்
உயிரைக்காக்க
படும் பாட்டை அறியீர்களோ?
மனித உள்ளம்
நேரியதாய் இருந்து — அதில்
இரக்கம் சுரக்குமானல்
இந்த உலகம்
முழுவதையுமே - அந்த
இரக்கம் ஒன்றினலேயே
ஆண்டு விடலாம்.

செ. றெபின்சன் ஜோ
புனித. மாட்டீனர் குருமடம்
யாழ்ப்பாணம்

## விடத்தல்தீவு

விடத்தல்தீவுப் பங்கில் புனிதயாகப்பர் விழா 25-7-89 இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜீவா போல் அடிகள் தமது மறைஉரைகளில்: கிறிஸ்தவ அழைப்பு எத்தகையது? அன்புவாழ்வ, விசுவாசவாழ்வு, அர்ப்பண வாழ்வு. சகோதரத்துவம் ஆகிய கிறிஸ்தவ மகிப்பீடுகளை நமது வாழ்வில் கடைப்பிடிப்பது எப்படி? என்ற சிந்தனைகளை தெளிவாக எடுத்துரைத்தார். சிறப்பாக இறைவனை அன்புசெய்தல். அயலாரை அன்புசெய்தல், இறை வார்த்தைக்குச் செவிமடுத்தல், இறைவனுடன் ஒன்றித்திருத்தல், திருச்சபைக்கும் எமக்கும் மரியாளின் பங்களிப்பும் மகத்துவமும் பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறினார். மேலும், சிறுவர்சிறுமியர், இளைஞர், யுவதிகள், தாய் தந்தையர்கள் ஆகிய பலதரப்பட்டவர்களின் கிறிஸ்தவ வாழ்வு' சமுதாயவாழ்வு எவ்விதம் அமையவேண்டும் என்பதை கருத்தரங்குகள் மூலம் தெளிவுபடுத்தினர்.

திருநாள் பலி பூசையை ஒப்புக்கொடுத்தபோது, "புனித யாகப்பர்கிறிஸ்துவின் கிண்ணத்தில்பங்குகொண்டார் என்றும், கிறிஸ்துவுக்காக தம்மை முதற்கனியாகப்பலியாக்கினார் என்றும், இவரது இறையன்பு, தியாகம், வீரம் ஆகியவற்றை இவரது பக்தர்கள் கண்டு பாவிக்க வேண்டுமென்றும் போதகர் தமது மறை உரையில் கேட்டுக்கொண்டார்.

தகவல்:- P. இராயப்பு

குறுங்கதை:-

## பக்தி

எம்பெருமான் இயேசுபிரானின் திருப்பாடுகளின் காட்சி நடித்துக்காட்டப்பட்டது. அக்காட்சியின் உச்சக்கட்டமான கசையடி, முள்முடிதரிக்கப்பட்ட வேதனையால், இயேசு கண்ணீர்விட்டு துன்பப்பட்ட நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த புனித அந்தோனியாரின் அடியாளில் ஒருத்தி, 'ஐயோ!... அந்தோனியாரே... ஆண்டவரைக் காப்பாற்றும்' என அலறினள்.

அருகே நின்ற குருவானவர் அந்தோனியாரின் அடியாளின் பக்தியைக்கண்டு மனமகிழ்ந்தார். ஆனல் அதேவேளை, அந்தோனியார் பின்பற்றிய ஆண்டவனை அவ்வடியாள் அறிய மறந்துவிட்டதை எண்ணி மனம்வருந்தி நின்றார்.

—அன்புக்குழந்தை—
புனித யாகப்பர் கோயிலடி
முருங்கன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்மையின் விலை என்ன?

உலகமே தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருக்கும் அவ்வேளையில் ஒரு உயிர்மட்டும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது. மனச்சாட்சிக்கும் அவருக்கும் தீவிரமான பேச்சு வார்த்தை நடக்கிறது. மணிக்கணக்கான இப்பேச்சு வார்த்தை முடிவுகாணுமல் தொடர்கிறது. மணிக்கூட்டின் இரண்டு முட்களும் ஒரு முள்ளாயின. தன் சிந்தனையை நிறுத்திவிட்டு இதயக் கதவை இழுத்துப் பூட்டி விட்டார். மனச்சாட்சியிடம் விடைபெற்றுக் கொண்டு போர்வைக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டார் ராசமணியத்தார்.

விடிந்தும் விடியாததுமாக ராசமணியத்தாரின் கால்கள் கார்க்காற சேவியரை நோக்கி சென்றுசொண்டிருக்கிறது. தன்மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்காக சாமான் வாங்க வாடகைக்கு அவர் சேவியரின் காரை அமர்த்தப்போகின்றார்.

"தம்பி சேவியர் என்ர மகளின்ர கொண்டாட்டத்துக்கு சாமான் கொஞ்சம் வேண்டவேணும் உன்ர காரை ஒருக்கா விட்டிடு."

"அதுக்கென்ன மணியண்ணை உனக்கில்லாத காரா?" சேவியரும் ராசமணியத்தாரின் வேண்டுகோளை ஆமோதித்து விட்டான். வீட்டில் ராசமணியத்தாரின் மனைவி மகள் ஆனந்தியை உரிய முறைப்படி கவனித்து வீட்டின் மூலையில் இருத்தி விட்டாள்.

பத்து வருடங்களுக்குப் பிறகு ராசமணியம் தம்பதிகளுக்கு ஆனந்தி வந்து பிறந்தாள். அறிவும், அழகும் நிரம்பியவள். ஆனந்தி அம்மா, அப்பா சொற் கட்டு நடக்கும் அடக்கமான சிறுமி ராசமணியத்தாரும் சற்றுக் கண்டிப்புடன்தான் அவளை வளர்த்து வந்தார்.

விழாவுக்கான ஆயத்தங்கள் உற்றார், உறவினரின் உதவியுடன் துரிதமாக நடைபெறுகின்றது. தூரத்தில் உள்ள உறவினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பியாயிற்று. வீட்டின் முன்னே பெரிய மண்டபம் போன்று பந்தல் ஒன்றும் போடப்பட்டாயிற்று. வாடகைக் கதிரைகளை சிலர் வண்டியில் இருந்து இறக்குகின்றனர்.

ராசமணியத்தார் வீட்டுச் சோடனைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய பெரிய வீட்டை அலங்கரிப்பதற்கு அவர் கடையில் வாங்கிய மாலைகளைவிட அயலவரிடம் இருந்து அன்பளிப்பாக பெற்றுக்கொண்டவையே அதிகம். ஊரார் அவருக்கு உதவிசெய்ய முன்வந்திருப்பது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஊரில் நடக்கும் கலியாணம், சாமத்தியம்போன்ற எல்லாக் கொண்டாட்டங்களுக்கும் மனைவி சகிதம் சென்று வந்தவர்தான். அவர் செலவழித்த பணத்தை எல்லாம் திருப்பிப் பெறவே அவர் இக்கொண்டாட்டத்தை பல திண்டாட்டங்களுக்கு மத்தியில் சிறப்பாகச்செய்ய இரவு பகல் பாராது ஓடித்திரிகிறா.

ராசமணியத்தார் மனைவியை தனியாக அழைத்து, "இஞ்ச பார், நாம இந்தக் கொண்டாட்டத்தை எல்லாருக்கும் சொல்லி வலு திறமாச்செய்ய வேணும். ஒருதரும் செய்யாத மாதிரி ராசமணியத்தான் செய்தான் எண்டு எல்லாரும் சொல்ல வேணும்" கடந்த வாரம் தொடக்கம் ராசமணியத்தார் இந்தப் பல்லவியை மனைவியிடம் பாடிக்கொண்டிருந்தார். அவளும் அவரை திருப்திப்படுத்துவதுபோல் தலையை ஆட்டி சம்மதம் தெரிவிப்பாள்.

ஆனந்தி அழகுத் தேவதையாக அலங்கார மண்டபத்தில் அமர்ந்திருக்கிறுள். பட்டொளி வீசும் புத்தாடை, அவளுடைய இயற்கை அழகுடன் போட்டி போடுகிறது. பொன்னகையையும் மீறி புன்னகை அவள் அழகை அதிகப்படுத்துகின்றது. கரைபுரண்டோடும் மக்கள் வெள்ளத்தைப் பார்க்க அவள் பயந்தாலும் கூட ராசமணியத்தாரின் கடுமையான எச்சரிக்கைக்கிணங்க அவள் தன் இயற்கைக்கு மாருக கஸ்ரப்பட்டே புன்னகைக்கின்றுள். உறவினர்

## சிறுகதை

முக்கால்வாசி வேலைகள்முடிவுக்கு வந்துவிட்டன. வெளிவேலை உள்வேலை என ஒரு சிலவே பாக்கி இருந்தன. அதுவும் மூற்றுப்பெறும் தறுவாயில் இருக்கின்றது. கொண்டாட்ட தினத்திற்கு இன்னும் ஒரு நாளே இருக்கிறது. படுக்கையில் ராசமணியத்தார் ஆயிரம் எண்ணங்களை உற்பத்தி செய்துகொண்டிருந்தார். இரவின் பயங்கரத்தை விட அவர் நெஞ்சின் அலைகள் பயங்கரமாய் அவரை ஆட்கொண்டன ஆயினும் என்ன, அவர் தன்னுடைய புத்தி சாதுரியத்தை நினைந்து தானே தனக்குள் சிரித்துக் கொண்டார். ஆயினும் மனச்சாட்சியின் குரல் ஒரு மூலையில் விடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவர் அதையெல்லாம் பொருட்படுத்த இப்போது தயாராக இல்லை. "என்ர மனுசி உண்மையில் ஒரு மந்திரிதான். என்ர ஐடியாக்கள செய்து முடிப்பதில சரியா என்ன மாதிரித்தான்" மனைவியின் ஞாபகமும் தோன்றி மறைகின்றது.

✱✱✱✱✱✱✱✱✱✱✱

தமிழ் நேசன்
கொழும்புத்துறை

✱✱✱✱✱✱✱✱✱✱✱

கிழக்கு வானில் பகலரசன் தலைகாட்ட முன்னரே ராசமணியத்தார் எழுந்து கொண்டார். அன்றைய நாள் அவர் குடும்பவாழ்வில் என்றுமே சந்திக்காத நாள் தனது வீட்டில், தன் தலைமையில் மாபெரும் விழா ஒன்றை எடுக்கப்போகும் மகிழ்ச்சியுடன் அவர் எழுந்து கொண்டார். அதற்காக அவர் இப்போது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்.

அலங்கார ஆடை அணிந்து அணிவகுத்து வரும் விருந்தினரை ராசமணியம் தம்பதியினர் அன்புடன் புன்னகை பொங்க வரவேற்கின்றனர். வீடு நிரம்பி வழிகின்றது. மாலையாகும் வேளையில் விருந்தினரின் வருகை இன்னும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

கள், வகுப்பு மாணவிகள், பாடசாலை ஆசிரியர்கள் என்று பலரும் வந்து ஆனந்தியை வாழ்த்துகின்றனர். முத்தமிடுகின்றனர்

"கொங்கிருஜிலேசன் ஆனந்தி, எங்கட கிளாசில நீதான் முதல் ஆள், எல்லாற்ற றெக்கோட்டையும் உடைச்சுப் போட்டா" வசந்தி மெதுவாகத்தான் கூறினலும் வந்திருந்த மாணவிகளின் காதில் அவை விழாமல் இல்லை. அனைவரும் சிரித்தனர். ஆனந்தியும் தான்.

எம்பலப்புகளும், பார்சல்களும் ஒரு பக்கமாகக் குவிகிறது ராசமணியத்தார் அவற்றையெல்லாம் கடைக்கண்ணுல் நோட்டம் விட்டு உள்ளூர மகிழ்ந்து கொள்கிறார்

அடுத்த நாள் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் முடிவுக்கு வந்துவிட்டன. நெருங்கிய உறவினர்கள் ஒருவர் பின் ஒருவராக விடைபெற்றுச் செல்கின்றனர். வீடு பொலிவிழந்து விட்டது.

ஆனந்தியின் வகுப்பு ஆசிரியை கலா ரீச்சர் நேற்று வரமுடியாமல் இன்றுதான் வருகின்றார். ஆட்களோடு ஆட்களாக வந்து வாழ்த்துவதை விரும்பாமலே அவ தனியாக இப்போது வந்திருக்கிறு.

"என்ன ஆனந்தி முகத்தில சிரிப்பக் காணல்ல. நேற்றைய கொண்டாட்டத்தில களைச்சுப் போனீரோ? நான் நேற்று வரயில்ல. ஐ ஆம் சொறி. தனியாக ஆறுதலாக் கதைப்பம் எண்டுதான் இப்பவந்தன்" என்றவாறு தன் பிரசன்னரை நீட்டினுள் கமலா ரீச்சர்.

அடக்கிவைத்திருந்த அழுகையை அப்பாவுக்குப் பயந்து வெளிக்காட்டாமல் விம்மலுக்கு மத்தியில் ஆனந்தி கூறுகிறுள். "ரீச்சர் எல்லாரும் நினைக்கிறமாதிரி நான் இன்னும், நான் இன்றும் பெரியவளாக இல்லை. அப்பாவும் அம்மாவும் குடும்பத்தோட கனடாவுக்குப் போறதுக்கு முன்னம் இந்தக் கொண்டாட்டத்த [illegible]

தாங்க ஊருக்கு குடுத்திருக்கும் காச போகமுன்னம் வேண்டறதுக்காக இப்படி நாடகம் ஆடி என்னையும் அதற்கு நடிக்கவைச்சுப்போட்டினம்."

அழுகையுடன் கூறிமுடித்தாள் ஆனந்தி. கமலா ரீச்சர் கண்களை அகல விரித்து ராசமணியத்தாரைப் பார்க்கிறு. மனைவியும் அவரும் எம்பலப்புகளில் இருந்து காசை எடுத்து எண்ணிக்கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

## புனிதர் வழியில்

**புனித மரியாளின் விண்ணேற்புத் திருநாளின் திருவிழிப்பு ஆகஸ்டு 14**

புதிய திருநாள் பட்டியலின் படி இத்தகைய திருவிழிப்பை விரும்பினுல் மட்டும் கொண்டாடலாம். திருவிழிப்பு வழிபாடு என்பது மாலை வேளையில் விழாக்கோலத்தில் நடைபெறுவதாகும். இந்த திருவிழிப்பினுடைய நோக்கம் மறுநாள் நாம் கொண்டாட இருக்கும் பெரிய திருநாளுக்குத் தகுந்த முறையில் ஜெபத்தாலும், தவத்தாலும், எமது உள்ளங்களை புனிதப்படுத்தி கொள்ளவே ஆகும். விண்ணகம் ஏறும் மாமரியோடு நாமும் நமது மனதினுல் விண்ணகம்செல்லவேண்டுமானுல், இவ்வுலகச் சங்கிலிகளைக் களைந்துவிடவேண்டும். இந்த மனநிலையோடு திருவிழிப்பில் கலந்துகொள்வோம்.

**புனித கன்னிமரியின் விண்ணேற்பு-15.**

பாப்பறை 12ஆம் பத்திநாதர் 1954ஆம்ஆண்டு கன்னிமரி ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள்என்றதிருச்சபையின் போதனையை விசுவாச சத்தியம் என்று பிரகடனப்படுத்தினுர். இந்த திருநாள் ஆன்மாவோடும் உடலோடும் கிறிஸ்துவினுடைய மகிமையில் பங்குபெற்ற முதல் புனிதவதி கன்னிமரி என்பதை உணர்த்துகின்றது. இந்த உலகில் வாழும் நாம் விண்ணகத்தைப் பற்றி எப்பொழும் அக்கறை உள்ளராக இருக்கவேண்டும் என்றும் திருநாள் கற்பிக்கின்றது.

**புனித ஹங்கேரி முடியப்பர் - ஆகஸ்டு 16 (கி. பி.975-1038)**

ஹங்கேரி நாட்டுப் பிரபுவின் மகனுன முடியப்பர், சிறு வயதாயிருக்கும்போதே புண்ணிய வழியில் வளர்க்கப்பட்டு, இவருடைய தந்தையின் இறப்பின் பின் அரசபதவிக்கு வந்சார். தன் நாட்டில் அஞ்ஞானத்தையும், கெட்டவாடிகளையும் நீக்கினுர். பல கோயில்களையும், தர்மசாலைகளையும் கட்டுவித்தார். தனது நாட்டு மக்கள் ஞாயிறு வழிபாட்டை ஒழுங்காக அனுசரிக்கவும் விபச்சாரம், சூது என்பவற்றை விட்டொழிக்கவும் கண்டிப்பான சட்டங்களை இயற்றுவித்தார். தனது மரண நேரத்தை அறிந்து தமக்கு கீழ்ப்பட்ட பிரபுக்களை அழைத்து, எப்போதும் திருச்சபைக்கு பணிந்து நடந்து மெய்மறையை பாதுகாக்க அறிவுரை கூறினுர்.

**புனித எவுதஸ் அருளப்பர் ஆகஸ்டு-19**

பிரான்ஸ் நாட்டிலே நார்மண்டி என்ற இடத்தில் பிறந்து தனது வீட்டிலிருக்கும் போதே 14வது வயதில் கற்பு என்னும் புண்ணியத்தைப் பழுதின்றிக் காபபேன் என்று வார்த்தைப் பாடு கொடுத்திருந்தார். கல்வி கற்றபின் "பிரஞ்சு அரட்டரி" என்று சொல்லப்படும் துறவறசபையில் சேர்ந்து 24வது வயதல் குருப்பட்டம் பெற்றுர். இவர் பாவ சங்கீர்த்தன வேளையில் கிறிஸ்துவைப்போல் இரக்கம் உடையவராக்காணப்படுவார். பிளேக் வியாதியினுல் பீடிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரியவும் நல்மரணத்துக்கு தயார் செய்யவும் சென்றபோது இரண்டுமுறை பெரிய ஆபத்தில் இருந்து தப்பித்தார். 1643ஆம் ஆண்டில் "ஆரட்டரி" சபையில் இருந்து விலகி திருச்சபையின் உத்தரவுடன் "இயேசு மரி" என்ற சபையை தாபித்தார் பின்னர் "நல்லாயன் கன்னியர்" என்ற சபையை பெண்களுக்கு என்று தாபித்தார்

எஸ். எஸ். கருணைதாஸ்
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.

## மனங்களே ஏடுகளாக

இளைய வாழ்வு இனிய வாழ்வு என்பார்கள். அந்தப் பசுமையான காலத்தை பசும் புல்தரையாகவும் மாற்றலாம். வெறிச்சோடிய பாழடைந்த பாலைவனமாகவும் மாற்றலாம். இளையவாழ்விலே உதயமாவது உன்னதமான சிந்தனைகள். முதியோர் கூறும் சிந்தனைகள் அவர்கள் தமது அனுபவத்திலிருந்து படித்ததை. கற்றுக் கொண்டவற்றை கூறுவார்கள். ஆனுல் இளையோரின் சிந்தனை புதுமலர் மலர்வதைப்போன்று புதியனவாயிருக்கும் எனவே இளைஞனே உனது ஆக்கபூர்வமான சிந்தனைகளை மக்கள் முன் சொல்லத்தயங்காதே! ஆக்கபூர்வமான சிந்தனைகளில்நின்று பிறப்பது ஆணித்தரமான கொள்கைகளும், இலட்சியங்களுமாகும். அவ்விலட்சியக் கொள்கைகள் வழியாக புதுப்புது சாதனைகள் தோன்றும். சாதிக்கும் சாதனைகள் சரித்திர ஏடுகளில் வடிக்காவிட்டாலும் கவலையில்லை. சாதனைகள் எம்மக்களுக்கே, எனவே மக்களின் மனமே எமது ஏடுகள்.

D. E ராணராஜ் இளவாலை.

### சீனப் பழமொழி

சொர்க்கத்திற்கு மலர்கள் தூவிய பாதை உள்ளது ஆனுல் அதில் யாருமே நடப்பதில்லை நரகத்திற்கு வாசலே இல்லை. ஆனுல் எல்லோரும் சுவர் ஏறிக் குதித்துக்கொண்டிருக்கிறுர்கள். -இராசசிங்கம் அன்ரநிஷா போயிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்துக் கிடக்கும் பணிகள்

இன்று 'சமாதானமின்மை' என்னும் நோயால் மனித இனம் அல்லலுறுகின்றது. எங்கும் அமைதியின்மை நச்சுப் புகைபோல் பரவி நாசம் விளைவிக்கின்றது இவைகளுக்கு மத்தியிலும் கூட இறைவன் நம் ஒவ்வொருவரையும் பணிபுரிய அழைத்திருக்கின்றார். புனித கிறிஸ்தோஸ்தம் அருளப்பர் கூறுவதுபோல "நாம் நமக்காக மட்டுமல்ல நம்மைச் சூழ்ந்து வாழும் ஒவ்வொருவரின் ஆன்மாக்களுக்காகவும், இறைவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாகின்றோம்"

அதிலும் இளைஞர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். சமுதாயம் தனது சுபீட்சமான வாழ்வுக்கு இளைஞர்களையே முற்று முழுதாக நம்பியிருக்கின்றது. எனவே இளைஞர்கள் தங்கள் கடமைகளைத் தட்டிக்கழித்துவிட முடியாது. தமது உரிமைகளைப் பேணக்குரல் எழுப்பும் அதே வேளையில் கடமைகளைச் செய்ய பின்னிற்றல் தகாது. அன்று அசட்டையாய் இருந்ததன் விளைவை இன்று அனுபவிக்கின்றோமென்றால் இன்றும் நாம் வாழாவிருந்து வருங்காலத்தைப் பாழடிக்கலாமா?

இன்று கல்வியறிவுக்காக ஏங்கி நிற்கும் இளம் பிஞ்சு உள்ளங்கள்தான் நாளையப் பிரச்சனைக்குரியவர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. எனவே பக்திச்சபைகள் மூலமாகப் பங்குரீதியில் நாம் பணிகள் புரிய முன்வரவேண்டும் சிறுவர்களுக்குப் பங்கு மட்டத்தில் மறைசார்ந்த/சாரா கல்வியை வழங்கவும், நல்ல பத்திரிகைகள், நல்ல நூல்கள் விநியோகம், பிறர் சிநேகப்பணிகள் நற்செய்திப் பணி போன்ற பணிகளில் ஈடுபடவும் இளைஞர்கள் தங்கள் ஆற்றல்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். அப்போதுதான் "உலகின் எல்லைவரை நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற கிறிஸ்துவின் இறுதிக்கட்டளையில் நாமும் பங்குபெற முடியும். நம்மைக் காத்துக்கிடக்கும் பணிகளை நாம் செய்யாவிட்டால வேறு யார் அதைச் செய்வார்கள்?

செல்வி லூசியா சூசைப்பிள்ளை
யாழ்ப்பாணம்

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
11-8-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு!

இன்று பல உள்ளங்கள் உண்மையான அன்பைத் தேடி அலைகின்றன; அன்பைக் கொடுக்காமல் அன்பைப் பெறத் துடிக்கின்றன. அன்பு என்பது பலவந்தமாகப் பெறக்கூடிய ஒன்றல்ல, சுதந்தரமான உளப்பரிமாற்றமே அன்பின் ஏற்புடைமையை நிர்ணயிக்கும். தன்னையே மறுத்துப் பிறருக்காக வாழுதல், தியாகத்தின் வெளிப்பாடாய் வாழ்க்கை மலருதல், பிறர் நலன் செறிந்த அர்ப்பணித்தல், தன்னை முழுமையாக வெறுமையாக்கியதன் மூலம் நிறைவு பெறுதல் போன்றவைதான் கிறிஸ்து காட்டிய அன்பின் சிறப்பம்சங்களாகும். அன்பின் அழியாத அர்த்தத்தை அனுபவரீதியாகக் கிறிஸ்து தனது தியாக வாழ்வின் மூலம், சிலுவை மரணத்தின் மூலம் தெளிவுபடுத்துகின்றார்

எனவே, அன்பர்களே! நாமும் எமது வாழ்வின் உள்நோக்கினைப் புரிந்தவர்களாக வாழவேண்டும் எனில் அன்பின் அர்த்தத்தை அனுபவரீதியாகக் கற்கவேண்டியவர்களாயுள்ளோம்: அன்பின் வழி எமது வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம்.

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன் வி பி.

## குருசுமுத்தண்ணையின் கிசுகிசு-43

அடைக்கலம்:- ஓடி ஓடி படிக்கினம் ஒழுக்கம் இல்லாம வீதியில திரியினம் இதுக்குத் தானு அண்ணே படிப்பு...!

குருசு:- தம்பி கல்வியை கற்க வேணும் அதை தடுக்காத ஆனு கல்வியோட ஒழுக்கத்தையும் கற்கவேணும் எண்டுறத படிப்பிக்கிற வாத்திமார் சொல்லிக் கொடுத்தா அறிவும் ஒழுக்கமும் சேர்ந்த மனிசர உருவாக்கினதா இருக்கும் எண்டத உணர்ந்து படிச்சா படிப்பிச்சா நல்ல மனிசர நம்ம நாட்டிலும் காணலாம் பாரு.

## நேரத்தை எடு

உழைக்க நேரத்தை எடுத்துக்கொள். அது வெற்றியின் விலை.

சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள். அது சக்தியின் ஊற்று.

விளையாட நேரத்தை எடுத்துக்கொள். அது அறிவின் வாயில்

நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள். அது இன்பத்தின் பாதை.

திட்டமிட்ட நேரத்தை எடுத்துக்கொள். அதுசாதனைக்கு வழி

அன்பு காட்ட நேரத்தை எடுத்துக்கொள் அது இறைவனின் கொடை.

M. C. ஞானசேகரம், உயிலங்குளம்.

## உன் இதயக்கோயிலை நண்பர்களால் நிரப்ப உனக்கு இதோ வழிகள்

— நீ தனித்தவன் அல்ல ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவன். எனவே பிறரை மதித்து அவர்களுக்கும் உன்னகத்தே இடம்கொடு.

— அன்பைக் கொடுத்து அன்பைப் பெற்றுக்கொள்.

— அவர்களது மங்கல நாட்களில் வாழ்த்துத் தெரிவிக்க மறக்காதே.

— பிறரது குற்றங்கண்டால் அன்புடன் கடிந்து திருத்து.

— பிறரது வெற்றி கண்டால் மனம் திறந்து பாராட்டு.

— பாராட்டுக்கடிதம், அனுதாபக்கடிதம் என்பன நீ பிறரில் அக்கறை கொண்டுள்ளாய் என்பதற்குச் சிறந்த சான்றுகள்.

— பிறரது திறமையைக் கண்டால் மனமகிழ்ந்து பாராட்டு.
உயர்விலும் தாழ்விலும் கைகொடுத்து உதவு.

— நீ உன்னையே மறந்து பிறருக்காக வாழ்.
பிறரைக் காணும் போது மனம் திறந்து ஆனந்தமாகப்பேசி அளவளாவு.

— நீ சிரி. உன் சிரிப்பு தொற்றும் தன்மையானது ஆதலின் உன்னைக் காண் போரையும் மகிழ்ச்சியாக வைக்கும் ஆற்றல் உனக்கு இயல்பாகவே வரும்.

— உன் புன்முறுவலினுல் நான் உன்னை விரும்புகின்றேன் என பிறருக்குத் தெரியப்படுத்து.

— உன் வாழ்விற் சந்திக்கும் அத்தனை நபர்களது பெயர்களையும் நினைவில் வைத்திரு.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)



## கிறிஸ்தவ திருமண ஆயத்தம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பாப்பிறை பதினொராம் பத்திநாதர் அழுத்தந்திருத்தமாக வெளியிட்டதாவது. "கணவன் மனைவியரின் உடலுறவின் நோக்கம் உயிரைத் தோற்றுவிப்பதேயாகும். மாறாக இயற்கைக்கு இயல்பாய் உள்ள ஆற்றலைச் செயற்கைமுறையாற் தடுத்துவிடுவானுயின் இறைச் சட்டத்திற்கு மாறாக மாபெரும் பாவம் புரிகிறான்" கருவைச் சிதைப்பதற்குத் திட்டமிட்டுச் செய்து கொண்ட நேரடித்தடுப்பு முறை சுகாதார நோக்கத்திற்காகச் செய்து கொண்டாலுங்கூட, சட்ட விரோதமானது. இது விலக்கப்படவேண்டிய தடுப்பு முறை.

ஆணும் பெண்ணும் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நேரடியாக மலடு ஆக்குதல் விலக்கப்பட வேண்டிய தடுப்புமுறையாகும்.

தாம்பத்தியச் செயலுக்கு முன்போ, அதில் ஈடுபடும் பொழுதோ அதன் இயல்பான விளைவின் போக்கிலோ இன உற்பத்தியைத் தடுப்பது விலக்கப்பட வேண்டிய தடுப்புமுறையாகும்.

நோய் நீக்கச் சிகிச்சை செய்தால் இன உற்பத்தி தடைபடும் என்றாலும் சிகிச்சை செய்யலாம். நேராக இன உற்பத்தியைத் தடுக்கும் நோக்கம் இருக்கக் கூடாது.

கணவன் மனைவியர் தங்கள் உடல் உள நிலைகளைப் பொறுத்து அல்லது பிற நிபந்தனைகளின் நிமித்தம் பிறப்பின் கால எல்லைகளை நீடிக்கவிரும்பினால் திருச்சபை அவர்களுக்குச் சலுகை ஒன்று அளிக்கின்றது. பெண்களுக்குத தனிப்பட்ட முறையில் வளமற்ற காலத்தைப் பயன் படுத்துவதின் முறை — குடும்பத்தின் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காகவும், ஏற்கனவே பிறந்துள்ள குழந்தைகளைப் பேணிப் பயிற்றுவித்து வளர்ப்பதற்காகவும் பல சூழ்நிலைகளில் இயற்கையான குடும்பசகட்டுப்பாட்டை மேற்கொள்வது பகுத்தறிவுக்கு ஏற்றதாகின்றது ஆறறிவுள்ள மனிதனையும் அவனைப் படைத்துள்ள கடவுளையும் ஒவ்வளவு நெருக்கமாக இணைக்கும் செயலில் மனிதன் தன் அறிவுத்திறமையைப்பயன் படுத்துவதைத் திருச்சபையே முதலிற் போற்றிப் பாராட்டுகிறது. ஆனல் அது கடவளால் நிறுவப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கு உகந்தவகையில் இருக்க வேண்டும் என்பதையும் திருச்சபை வற்புறுத்துகின்றது இயற்கை முறைமைப்படி வளமற்ற காலங்களில் மட்டும் தாம்பத்தியச் செயலுக்கு ஈடுடுவது என்று திருச்சபை கற்பிக்கின்றது. இக்கட்டுப்பாடு ஒழுக்கத்திற்கு முரண்பட்டது அல்ல

செயற்கைக் கருத்தடையின் தீமைகள்:—1. கணவன் மனைவியருக்கிடையில் சந்தேகம், 2, பிரமாணிக்கம் இன்மை, 3. ஒழுக்க நெறியிற்தளர்வு, 4. கருத்தடை முறைகளைக் கையாளும் ஆண்கள் பெண்களின் உடல் உள நலன்களை உணராததுடன் அவர்கள் மட்டிற் கொள்ள வேண்டிய மதிப்பையும் மறந்து விடுகிறார்கள் இன்னும் உடம்பில் பலவித நோய்களுக்கும் இதுகாரணமாகின்றது.

அருட்சகோதரி திரேசிற்ரு ( தி கு. க. )

## திருமண ஆயத்தம் முடிவுரை

எங்சோ பிறந்து வளர்ந்த பெண்ணும் ஆணுமோ, அன்றேல் திருமண வாழ்விற்கு ஏற்ற உறவு முறையில் உள்ள பெண்ணும் ஆணுமோ எதுவித கட்டாய நிபந்தனைகளுமின்றி ஒருவர் ஒருவரை அன்புணர்வில் ஏற்று வாழ்வதற்குத் தம் உள்ளங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் நிலைதான் திருமண ஆயத்தம் எனப்படும்.

இத்தகைய திருமண ஆயத்தத்திற்கு வெறுமனே மேற்கொள்ளும் வெளி ஆடம்பரங்கள் அவசியமானவை அல்ல. அது ஆன்மீக ரீதியில் அன்பு, தியாகம் எனும் வல்லமை மிக்க சக்திகளால் அடித்தளமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட வேண்டியது. இதற்கு உலகப் பொருட்களான சொத்துச் சுகந்தம் முக்கியமானதல்ல. இயற்கை இன்பத்தை நல்லதோர் வாழ்க்கைத் துணையோடு சேர்ந்து தான் சுவைக்க முடியும். இவ்வுண்மையை எம் முதல் பெற்றோரின் வாழ்வில் இருந்து அறிய முடிகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம், த. பெ. இல. 2. யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-29

### சொப்போனியாஸ்:-3

சொப்போனியாஸ் ஆகமம் 1 : 2 - 2 : 3 வரையுள்ள பகுதிகளில் யாவேயின் நாள் பற்றி விபரிக்கப்படுகின்றது. உலக வரலாற்றில் இறைவன் தலையிட்டு எதிரிகளை வெற்றி கொள்வார் என இஸ்ராயேலர்கள் நம்பிவந்தனர். இறைவனது இந்தத் தலையீடும், வெற்றியும் யாவேயின் நாள் எனக் குறிப்பிடப்படுகிறது. ஆண்டவரின் நாள் பற்றி ஆமோஸ், இசையாஸ் ஆகமங்களிலும் காணப்படுகின்றது. சொப்போனியாஸ் ஆண்டவரின் நாள் பற்றி விரிவாகக் கூறுகின்றார்.

யாவேயின் நாள் உலகம் முழுவதற்கும் பேரழிவைக் கொண்டுவரும் நாள். "நிலப்பரப்பின்மேல் இருக்கும் யாவற்றையும் தொலைத்து விடுவோம். மனிதனையும், மிருகத்தையும் தொலைத்து விடுவோம். கொடியவர்களைக் கவிழ்த்து வீழ்த்துவோம். மனுக்குலத்தை நிலப்பரப்பில் ஒழித்துவிடுவோம்" என்று ஆண்டவர் கூறுகிறார்.

இவ்வாறு தண்டிக்கப்படக் காரணம், மக்கள் எல்லோரும் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்தபடியாலாகும். ஆண்டவரைப் பற்றித் தேடாமலும் அவரைப்பற்றி விசாரியாமலும் இருப்பவர்கள் கூட அழிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்படுகின்றது. யாவேயின் நாள் பற்றி இறைவாக்கினர் சொப்போனியாஸ் விபரிக்கும்போது எந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சியையும், சுட்டிக்காட்டவில்லை. காலவரையறையில்லாமல் எல்லாக் காலங்களிலும், மக்கள் புரிகின்ற தவறுகளை மனதில் கொண்டு இறைவாக்கினர் ஆண்டவரின் நாள் பற்றிச் எடுத்துக்காட்டியிருக்கலாம்.

நாம் வாழும் இக்காலத்திற்கும் இவை பொருந்தக் கூடியவை. இந்த நூற்றாண்டிலும், மக்கள் மேலும், நாடுகள் மேலும் பயங்கர அழிவுகள் நிகழ்வதைக் காண்கின்றோம். இவையெல்லாம் இறைவன் வரலாற்றில் தலையீடு செய்வதன் விளைவாகும். ஆண்டவரின் நாள் என்பது பல கட்டங்களால் ஆனதாகும். இக்கால நிகழ்வுகள் ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது. என்பதை எச்சரிக்கின்றன. காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து வாழ நாம் அழைக்கப்படுகின்றோம்

இ. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 85

## பாறையினின்று தண்ணீர்

சின் பாலை வனத்தில் காதேசில் மக்களுக்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் முணுமுணுத்து முறைப்பாடு செய்தனர். மோயீசனும் ஆரோனும் உடன்படிக்கைக் கூடாரத்திற்குச்சென்று மக்களின் முறைப்பாட்டைக் கூறினர். யாவே பாறையிலிருந்து மக்களுக்குத்தண்ணீர் கொடுக்குமாறு மோயீசனுக்கு கட்டளையிடுகின்றார். மோயீசன் பாறையில் அடித்து நீர் வரச்செய்கிறார்.

ஆனால் இங்கு மோயீசன் யாவேயின் கட்டளையைச் செயல் படுத்தும் போது பாறையை இருமுறை அடித்தார் (எண்.20:11). இங்கு இஸ்ராயேல் மக்களின் நோயாகிய அதிருப்தியின் விளைவாக மோயீசன் இறைவனது பொறுமையை ஐயுறத் தொடங்கியதாகத் தெரிகிறது. எனவே இருமுறை பாறையை அடிக்கிறார். இதனால் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு மக்களை இட்டுச் செல்ல மாட்டார் என்று மோயீசனை இறைவன் தண்டிக்கிறார் (எண். 20:12).

இப்பெரிய தண்டனை பெறுவதற்கு மோயீசன் ஏதாவது பெரிய பாவம் செய்திருக்க வேண்டும் என்பர் என்ன தவறு என்று கூறமுடியாது. சில விளக்க ஆசிரியர்கள் மோயீசன் ஒழுக்கக்கேடான பாவம் செய்திருக்க வேண்டும் பிற்கால பதிப்பாசிரியர்கள் அதை வேண்டுமென்று மறைத்து விட்டனர் என்பர். ஆனால் இதற்கு ஆதாரங்கள் இருப்பதாகத்தெரியவில்லை.

வேறு சிலர் எண்ணாகமத்தில் விடைகாண முனைகின்றனர். மக்களின் தாகத்திற்கு அருஞ்செயல் மூலம் நீரைக் கொடுத்து யாவேக்கு இயற்கையின் மேல் உள்ள அதிகாரத்தைக் காட்டும் ஒரு வாய்ப்பான இச்செயலில் கடவுளுக்குப்பணிவதற்குப் பதிலாக மக்களை மோயீசன் கடிந்து கொள்கிறார். இந்தத் தேவையற்ற குறுக்கீட்டிற்காகத் தண்டிக்கப்படுகிறார் என்று கூறுகின்றனர்.

வேறு ஆய்வாளர்கள் இஸ்ராயேலர்கள் கானானையர்களை எதிர்த்துப் போராடவில்லை அதற்கு மோயீசனும் இசைந்திருக்க வேண்டும் அதற்காகக் தண்டிக்கப்படுகிறார் என்றனர். ஆனால் இறைவன் மோயீசனுக்குக் கொடுத்த இப்பெரிய தண்டனைக்குக் காரணமான தவறுபற்றி ஒன்றும் உறுதியாகக் கூறமுடியாது.

இ. ம. ஜெயசீலன்

## சிந்தனைச் சிதறல்கள்

1. குணம் என்பது பண்பாட்டு நடையிலே தொடர்ந்து வரும் ஓர் இயல்பு.

2. இன்பம் என்பது செய்கிற வினைகளுக்கு இறைவனால் அளிக்கப்படும் நன்மதிப்பு.

3 துன்பம் என்பது இறைவனால் தன்னை மறவாமல் இருக்க கொடுக்கும் ஞாபகக் குறிப்பு.

4. பணம் என்பது ஏழ்மையின் தன்மானத்தை விலை பேசும் அளவுகோல்.

5. அனுதாபம் என்பது பிறரின் உதட்டளவில் உதிரும் சொல். அதை நம்பாதே.

6. உறவு என்பது ஊற்றெடுக்கும் செல்வத்தின் பின்னால் வரும் நடைபாதை.

செ. றெபின்சன் ஜோ
தாழையடி

## சிந்தனைத் துளிகள்

எந்த நிலையிலும் தன்நிலை இழக்காமல் மனஉறுதியோடு எதிர்ப்புக்களைச் சமாளிப்பவனே சிறந்த மனிதன்.

குனிந்து நடப்பவர்கள் எல்லாம் ஆண்டவனின் தாழ்ச்சி மிக்க தாசர்கள் என்று நினைப்பது தவறு.

வாழ்க்கை என்பது வருடங்களின் எண்ணிக்கையில் அல்ல. வாழும் வகையில்தான் உள்ளது.

ஆயிரம் மாறலாம். ஆனால் அன்பும் உண்மை நட்பும் மாறுவதில்லை.

மனிதன் ஒரு மத்தாப்பூ அவன் இறைவன் என்ற நெருப்போடு சேரும்போதுதான் சுடர் விடுகின்றான்.

முரடனுக்கும் கூட இதயம் உண்டு.

இரக்கமுடையவர்களைப் போல் நடிப்பவர்கள் தனிவாழ்வில் கொடூரமானவர்களாய் இருப்பார்கள். கடுமையானவர்கள்தான் பெரும்பாலும், அன்புடையவர்களாக இருப்பார்கள்.

இ மெரீனா றேசா
நாரைட்டான்.

## உன் இதயக் கோயி...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி)

— செல்லும் இடமெல்லாம் நீ உற்சாகமாகச் செல்லின் ஏனையோர் உன்னைக்காண, உன்னோடு பேச, உன்னோடு நட்புக்கொள்ள பெரிதும் விரும்புவர்.

இவற்றினை நீ கடைப் பிடித்து ஒழுகி வருவாயானால் உன் இதயக்கோவில் நண்பர்களால் நிரம்பும்.

செல்வி. ஆன் மேலின்
குசைதாசன்
வணிகபீடம்
இறுதிஆண்டு
யாழ். பல்கலைக்கழகம்

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 3<br>சுடர்: 28 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## வாரம் ஒரு வார்த்தை

"இதோ ஆண்டவரைப்பற்றிய அச்சமே ஞானம் தீமையை விட்டுவிலகுவதே அறிவு" யோபு 29: 28

### சமாதானம்

நான் விரும்புவது சமாதானம்
நல்லதொரு சமாதானம்
நானிலம் எங்கும்
அமைதி நிறைந்திடவே

சாதி மத பேதங்கள்
சக்தியற்றுப் போய் விடவே
சண்டை சச்சரவுகள்
செயலிழந்து செத்திடவே

ஒருவரோடு ஒருவர்
உளமார உறவாடி
வேரோடு சாய்த்திடுவோம்
வேற்றுமைத் தருவினையே

எளிமையில் உதித்த மகன்
எமக்குத்தந்திட்ட அன்புச் செடியை
அகத்தினிலே வளர்த்திடுவோம்
அவனி எங்கும் பரப்பிடுவோம்.

M. நிலானி வின்சஸ்சிலோஸ் அங். எண். 18.

### திருக்குறளும் விவிலியமும் போட்டி: 3.

அடுத்த சுடரில் வரும்.

### அறியாயோ ஆண்டவனின் குரலை

ஆழக் குழிதோண்டி வணிகன் ஒருவன் தனது முத்துக்களையும், பெறுமதியான பொருட்களையும் பாதுகாப்பிற்காக மறைத்துவைத்திருப்பது போல்; இறைவன் இவ்வுலகில் எம்மை உருவாக்கியபோதே மனம் என்னும் ஆழ்ந்த மறைவிடத்தில் எம் ஒவ்வொருவருக்கும் 'மனச்சாட்சி' எனும் அரும்பெரும், அற்புதமான பொருளைப் பதிய வைத்தார். நல்லது எது? தீயது எது?, என சுட்டிக் காட்டிக் கொண்டு அனுதினமும் எம் ஆழ்ந்த உள்ளக்கிடக்கையில் குரல் எழுப்பிக் கொண்டேயிருக்கிறது.

மனிதன் படைப்பில் பகுத்தறிவு உடையவனாகப் படைக்கப்பட்டாலும், அந்தப் பகுத்தறிவை இந்த மனச்சாட்சியே பூரணப்படுத்தி முழுப்பொருளைக் கொடுக்கின்றது. மனிதன் மாக்களாக வாழாது, மக்களாக வாழ, அவன் உள்ளத்தில் இந்த ஆண்டவனின் குரலாகிய மனச்சாட்சி அனுதினமும் ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

"மனிதன் இறைவனாகலாம்—அந்த
மனிதன் மிருகமுமாகலாம்"

இந்த ஆண்டவனின் குரலாகிய மனச்சாட்சிக்கு எப்போதும் ஒருவன் கீழ்ப்படிந்து வாழவேண்டும். இவ்வாறு வாழும் போது அவன் ஆண்டவரின் அன்புக்கட்டளைகளை ஏற்று, அயலவர் மட்டில் அக்கறை உள்ளவனாக, மண்ணக வாழ்க்கையை மறுத்து விண்ணக வாழ்வை நோக்கி வீறுநடை போட்டு இறைவனின் சாயலைத் தன்னுள் பதித்துக் கொள்ளுகிறான். இவற்றிற்கு மாறாக இறைவனின் குரலாகிய மனச்சாட்சிக்கு அமையமறுத்து தான்தோன்றித் தனமாகவாழும் போது அவன் இறைவனிடமிருந்து விலகி, மனித மாண்பினை அடியோடு அழித்துவிடுகிறான். இதனால் மனிதன் தன்சுயநிலைமறந்த நிலையில் மிருகம் போல் வாழ்கிறான். இதன் விளைவினால் அழிவே அவனது கடைசிக்கதியாக அமைகிறது.

வெ. யூஜின் A/10 வாகரை.



## வாசகர் கருத்து



பாதுகாவலனே! எழுதிச்செபியுங்கள் போட்டிகளின் மூலம் எம்மை இறைவனுடன் தொடர்புகொள்ளச் செய்கிறாய் எமது அறிவு; ஆற்றல்; திறமைகளை வளர்க்க எவ்வளவோ உழைக்கின்றாய்.

பாதுகாவலனே! நீ ஒவ்வொருவரையும் முழுமையான கத்தோலிக்கராக்க உழைப்பதையும், உருவாக்குவதையும் உணர்கின்றேன்.

சவரிமுத்து பாஸ்கரன்
போயிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா? போட்டி 26

விஞக்கள்

பாதுகாவலன் பத்திரிகையில் இதழ் 23-தொடக்கம் இதழ்-26 வரை வினவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினு இலக்கத்தையும் சரியான விடையையும் தெளிவாக எழுதி 31-8-89இற்கு முன் பாதுகாவலன், அ பெ. இல-2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும், பரிசு பெறுபவர் பெயரும் அடுத்த போட்டியும் 8-9-89 இல் வெளிவரும். பரிசு ரூபா 25/-

1. ''மரியாயின் சேனை''யின் கடல் கடந்த முதல் பிரசீடியம் எங்கே? எப்போ? நிறுவப்பட்டது?

2. ''ஒழுக்கக் கேட்டின் ஆய்வு கூடம்'' என எந்நாடுகள் வர்ணிக்கப்படுகின்றன?

3. மடகஸ்கார், றே யூனியன், சம்பியா, மாலாவி ஆகிய நான்கு ஆபிரிக்க நாடுகளுக்கு மேற்கொண்ட அப்போஸ்தலிக்க பயணம் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் ... யாவது பயணம்.

4. கிறிஸ்தவத்துக்கும் இந்தியாவுக்குமுள்ள உறவை அதாரங்களுடன் எண்பித்தவர் யார்? அவர் எந்த மாநிலத்தின் ஆளுநர்?

5. அண்மையில் சூசையப்பர் அம்மானையை ஆக்கியளித்த அமுத கவி யார்? அவரைப் பாராட்டும் விழா எப்போ, எங்கே நடைபெற்றது?

6. சுதேச குருக்களுக்கான அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையை ஸ்தாபித்தவரின் தாயாரின் பெயர் என்ன?

7. தாய்லாந்தின் கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் ஆதரவில் இயங்கும் ஒரு நிறுவனம் வீதிகளில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் குழந்தைகளைப் பராமரித்து வருகிறது. அந்நிறுவனத்தின் பெயர் என்ன?

8 இந்தியாவிலுள்ள இயேசு சபைக் குருக்களின் சிரேஷ்டர் யார்?

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி 25இல்

சரியான விடைகள்

(1) I நாகூம், II நாகூம், (2) கே பிரான்ஸிஸ் (3) 28, (4) பிரான்ஸிஸ்கோ, யசிந்தா, (5) முன் எட்டுப் படலங்கள், (6) கைப்பைகள், மேசைவிரிப்புகள், சுவர் அலங்காரங்கள், எம்பிலிப்பிட்டிய கன்னியர் மடத்திற்கண்மையில், (7) நம்பூதிரிபாத் கம்யூனிஸ்ட் அரசாங்கம், (8)75 ஆலயங்கள்

பாராட்டுப் பெறுவோர்

மை. றெபினு ஜொய்ஸ், 2ம் வட்டாரம், புங்குடுதீவு, ச. அந்தோனிப்பிள்ளை மாசியப்பிட்டி சண்டிலிப்பாய், சன்ராஜ்ட் பொனிப்ஸ், 182 (90) கண்டி றேட் யாழ்ப்பாணம், அலன்மிலர் ஜேம்ஸ் கண்டி றேட் யாழ்ப்பாணம், பீ. யோசவ் ஆண்டார் செட்டிவெளி நானாட்டான், ஏ. ஜே. தர்மராஜா றேய் றேச் பள்ளிமுனை மன்னார், டி. லக்ஸ்மன் றேச் மே/பா திருமதி மலர்துரம் பேசாலை, அருள்மலர் அருளானந்தம் பிள்ளையார் லேன் மயிலிட்டி. D. றேய் றேச் பள்ளிமுனை, மன்னார், ஜே. திபன் சோசை 1ம் வட்டாரம் வங்காலை, ஜே. அகிலன் 1ம் வட்டாரம் வங்காலை, எம் ரூஜன் குலாஸ் 9ம் வட்டாரம் வங்காலை, ம. அன்னம்மாகுலாம் 1ம் வட்டாரம் வங்காலை, எஸ். யூலியஸ் 11ம் வட்டாரம் புங்குடுதீவு, செ. ஜெயராணி கூஞ்ஞு தலைமன்னார், எஸ். ஜோண்மேரி, மணிப்புரி, கொழும்புத்துறை, எல். ஆர். கொன்ஸ்ரன்ரைன் 873 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், மியூறின் றூபி அருட்பிரகாசம் 2ம் வட்டாரம் புங்குடுதீவு, ஜே. கீதாஞ்சலி சோசை 1ம் வட்டாரம் வங்காலை, அ. அதிரியான் சோசை 6ம் வட்டாரம் வங்காலை, செல்வி லூசியா கிறேஸ் அருட் பிரகாசம் புங்குடுதீவு, ஞ. போல் றஜனி சென் தோமஸ் லேன் பருத்தித்துறை, செ. எட்வேட் தும்பளை பருத்தித்துறை.

பரிசுபெறும் நற்பேறுளர்

J. F. யேசுதாசன், 122, ஐகிளிப் அப்புத்தளை.

# மண்ணவர் போற்றும் விண்ணகப் பெருவிழா

ஆவணியில் ஆலயத்தோர் விழா வெடுத்து
அழகு மிகு தேவ அன்னை பவனி வர
காவலாய் கடும்பிணி நோய்தடுத்தே
கருணை யோடரவணைப்பாள் அன்னையவள்.

பாவவினையகன்று பரவசமடைந்திட
பக்தர் அணிதிரண்டு பத்மலர் நாடிட
நாவாய்ப் பதி நாயகியை காண்பதற்கே
நாற் புறத்தோர் நாடுகின்றனர் நலங்காண.

பன்னிரு விண்மீன்கள் புடை சூழவே
பாதமதில் சந்திரனும் தான் கூடவே
தன்னரும் மைந்தனைக் கண்டாளவே
மகிமையோ டெழுந்தாள் விண்ணகத்தே

திங்கள்தனை காலடியில் திகழவைத்து
திருமகனை தினம் எமக்காய் துணை நின்று
மங்கையர் குல பரலோகமாதா வாழும்
மகிமையுறும் விண்ணகப் பெருவிழா காண்போம்.

ம. சிந்தாத்துரை
நாவாந்துறை

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. S. அன்ரனி பிரான்சீஸ்
(ஆசிரியர்-புனித சவேரியார் கல்லூரி மன்னார்)

மலர்வு 17-9-1930 — உதிர்வு 23-8-1964

கண்ணிய மிக்க கணவனாய்
கரிசனையுள்ள தந்தையாய்
மனம் மலர்ந்த மனிதனாய்
வழிகாட்டிய ஆசிரியனாய்
வாழ்ந்து வந்த காலமதில்
எண்ணமுன் விண்ணுலகை
எய்தினையே! என்செய்வோம்!
விண்ணகத்தில் மாட்சிபெற்று
வீற்றிருக்க இறைவனை
வேண்டுகிறோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-8-89 மாலை 5 மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலஸ் ஆலயத்திலும் 23-8-89 காலை 6-15மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்

நீங்காத நினைவில் துயருறும்
மனைவி, மக்கள்,
உடன்பிறப்புக்கள், உற்றார்,
உறவினர்.

''ஜோதிலீன்''
மிருசுவில். A/167

## 31-ம் நாள் அழைப்பிதழும் நன்றி நவிலலும்



திருமதி. P. F. ராணி அந்தோனிப்பிள்ளை
(ஆசிரியை யா/ மாதகல் புனித தோமையார் வித்தியாலயம்)

மலர்வு: 6-3-1934 — உதிர்வு: 18-7-1989

'' சிவியத்தில் நினைத்தவர்களே என்னை என்றும் மறவாதீர்''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் 17-8-1989 வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி அனைவரையும் அழைக்கின்றோம்.

இவரது இறுதிச் சடங்கில் பங்குபற்றி பல வழிகளிலும் ஆறுதலளித்த அருள்தந்தையர்கள், அருள்சகோதரிகள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எம் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தாய், சகோதரங்களின் குடும்பங்கள்.

'இம்மனுவேல் லொஜ்'
மாதகல்.

# புகையும் சாம்பலும்

இன்று

மாமி வீடு சென்றுவந்த
மாணிக்கம் அண்ணை,
தேநீர் குடிப்பதற்கு, ரீயூட்ட றிக்கருகமைந்த,
தேநீர்ச் சாலைக்குச் சென்றிட்டார் - அங்கே,
முத்தையா மாஸ்டரின் மூத்தபுத்திரன்,
மூக்கினால் புகையதனை, ஊதிடக் கண்டிட்டார்.
வீட்டுக்கு வந்தவுடன் அதனை,
வீதியில் நின்று விளம்பரம் செய்திட்டார்.

முந்தாநாள்

முத்தையா மாஸ்டர் முந்தாநாள்
காசோலை கொண்டு ஏகிட்டார் ஓர் 'கடைக்கு'
மாணிக்கம் அண்ணையின் மணியான புத்திரன்
வேறோர் 'பானம்' உள்ளே சென்றிட,
வெறும் புகை மட்டும் வெளியேற்றும்
காட்சிதனைக் கண்டிட்டார் கண்ணால்,
வீட்டுக்கு வந்தவர் விடவில்லை மூச்சு.
முன் வீட்டுக் காரருக்கும்—ஏன்?
தன் பிள்ளை தவிர மற்றதுகளெல்லாம்,
தறுதலைகள் என்பது,
மாணிக்கம் அண்ணையின்
மாறாத நம்பிக்கை.

—வே. சாமுவேல்



## வாசகர் கருத்து

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

28-7-89 அன்று வெளிவந்த காவலனில் ''குடும்பம்ஒரு கதம்பம்'' என்ற நிகழ்ச்சியை வாசித்தேன். அதில் இன்றைய பெற்றோர்கள் சில தவறுகள் செய்வதினால், அதைப்பார்த்து இன்று வளர்ந்து வரும் இளம் வர்க்கங்கள் அதே தவறுகளைச் செய்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

''ஆம்'' அது முற்றிலும் உண்மை. இவற்றிற்கு அடிப்படைக் காரணம் இன்றைய எம் பெற்றோர்கள்தான் சில பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் முன்னால் கெட்டவார்த்தைகளைப் பேசுகிறார்கள். சிலவேளையில் அந்த கெட்ட வார்த்தையால் அப்பிள்ளை தன் பெற்றோரைப் பேச நேரிடுகிறது. இதற்குக் காரணம் யார்? பெற்றோர்கள்தான் காரணம் இவ்வாறான சொற்கள், செயல்களினால் இளம் வர்க்கங்கள் தம் றோஜா மலர் போன்ற உள்ளங்களைக் காயப்படுத்துகின்றார்கள். ஆகையால்! பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளில் விழிப்பாயிருங்கள். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கையில்தான் உள்ளது. உங்கள் பிள்ளைகளை நல்வழி நடத்த முயற்சி செய்யுங்கள்: ''முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்''

அந்தோனிமுத்து சுகந்தி
போயிட்டி, இளவாலை

★

சென்ற ஆண்டில் (1988) க. பொ. த. உயர்தரமாணவர் றோமன் கத்தோலிக்க மாணவர்கள்பரீட்சைக்குத்தோற்றும் வகையில் கட்டுரைகள் வெளிவந்தன. ஆனால் இவ்வாண்டில், அதேபோல் எந்தவொரு நிகழ்ச்சியும் வெளிவருவதில்லை. (இறைவாக்கு அறிவோம் பகுதியைத் தவிர)

ஆகவே எமது சமூகம் ''கல்வியே கருந்தனமாயிருக்க'' உயர்தரமாணவருக்கு பாதுகாவலன் பத்திரிகை மூலம் (நிகழ்ச்சிகள் மூலம்) பரீட்சைக்கு உதவி வழங்கும்படி கேட்பதுடன் பாதுகாவலன் நியோகமும் அதிகமாகும் என எண்ணுகின்றேன்.

நன்றி.
இப்படிக்கு
யா. யூலன் குருஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# திருப்பலி நடக்கும் வேளையில் செபமாலை சொல்வது தவறு

நற்கருணை வழிபாட்டு வேளையில் செபமாலை ஓதுவது தவறாகும் என இந்தோனேஷியாவில் உள்ள றாட்டெங் மறை மாவட்ட முதல்வரான பிதா மக்ஸ் நம்பு கூறியுள்ளார். அப்பிரதேசத்திலுள்ள கத்தோலிக்க மக்கள், படிப்பறிவு உள்ளவர்களும் கூட திருப்பலி வேளையில் செபமாலை ஓதுவது ஒரு வழக்கமாகி விட்டது. இப்பக்தி முயற்சி தவறானது. ஏனெனில் திருப்பலியின் மையம் மரியாள் அல்ல.

பொருத்தமற்ற முறையில் மக்கள் இப்பக்தி முயற்சியைக் கடைப்பிடிப்பதற்கு பிதா நம்பு மூன்று காரணங்களைக் கூறுகின்றார். ஒன்று கல்வியறிவின்மை.எழுத்து வாசனையற்ற மக்கள் திருப்பலியில் செபங்களை வாசிக்க முடியாமையால் செபமாலை போன்ற எளிமையான செபத்தையே அவர்களால் சொல்ல முடிகிறது. இரண்டாவது எப்போதும் செபமாலையைச் சொல்லி பழக்கப்பட்டுவிட்டபடியால் அது இல்லாத வழிபாடு அவர்களுக்கு குறையுள்ளதாகத் தெரிகிறது. மூன்றாவது தந்தையை விட தாயோடு நெருங்கிய உறவு கொள்வது மனித இயல்பு.

இந்நிலைமையைச் சீர்படுத்த தாம் பிரசங்கங்கள், உரைகள் மூலம் நற்கருணையின் உண்மையான அர்த்தத்தை மக்களுக்கு விளக்கி வருவதாக பிதா நம்பு கூறியுள்ளார். ஆனால் இத்தகைய போதனை மட்டும் போதாதென்றும் சிறு குழுக்களாகப் பங்குமக்களிடம் உரையாடுவது அவசியம் என்று மறை ஆசிரியரான யோசப் கக்கோர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

## பெண்களின் நிலைகுறித்து வித்தியாபீடம் ஆராய்கின்றது

பூனேயில் உள்ள சமய தத்துவக் கல்லூரியான ஞானதீப வித்தியாபீடத்தின் 1989-90 கல்வியாண்டின் ஆரம்ப அமர்வின்போது இந்திய பெண்களின் நிலைபற்றி ஆராயப்பட்டது. அப்போது ''மனுஷி'' என்னும் சஞ்சிகையின் ஆசிரியையான திருமதி. மது கிஷ்வார் நீண்ட உரையாற்றினார் பெண்களின் கடமைக்கூறு ஆண்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்றும் பெண்களுக்குரிய சட்டங்களை ஆண்களே ஆக்குகின்றனர் என்றும் பெண்களின் சமூக சீர்திருத்தங்களுள் பல ஆண்களினாலே ஆரம்பிக்கப்பட்டன என்றும் கூறிய இவர் பெண்களுக்கு அளிக்கப்பட்ட கல்வி அவர்களின் அறிவு வளர்ச்சிக்காக அன்றி பிற தேவைகளுக்காகவே என்று குறிப்பிட்டார். சமுதாயத்தின் ஏழைகளாகவும் ஒதுக்கப்பட்டோராகவும் இருக்கும் பெண்களுக்காக உழைக்கும்படி அவர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினரான ஆயர் டிசோசா சேவையிலும் கல்வியிலும் பாடுபட்டு உழைக்குமாறு மாணவர்களைத் தூண்டியதுடன் இறைவார்த்தையின்படி அவர்கள் உருவாக வேண்டுமென்றும் கூறினர்.

## 500 முத்திரைகளில் வேதாகம விளக்கங்கள்

கொத்தமங்கலம் ஊரைச் சேர்ந்த திரு. செரியன் பூஞெளி கடந்த கால் நூற்றாண்டு காலமாக முத்திரை சேர்ப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளார். இவரது கோவையில் ஏறத்தாள 60000 முத்திரைகள் உள்ளன.

அண்மையில் இவர் ''முத்திரைகளில் வேதாகமம்'' என்னும் ஒரு சிறு நூலை அமைத்துள்ளார். இதில் 500 க்கு மேற்பட்ட முத்திரைகள் வேதாகம ஒழுங்கின்படி தேவையான குறிப்புகளுடன் கோக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான முத்திரைகள் புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளையே சித்தரிக்கின்றன. நூற்றுக்கதிகமான முத்திரைகள் கிறிஸ்து பிறப்பைக் குறிப்பனவாகும்.

திரு செரியன் பூஞெளியின் முத்திரைத் திரட்டு பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. ''தீபிகா'' ''மேரி விஜயம்' என்னும் மலையாள வெளியீடுகள் இவரைப்பற்றி கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளன.

## சோவியத் குடியரசுக்கு ஒரு ஆயர் நியமனம்

சென்றவாரம் முதல் தடவையாக போலாந்து ரஷ்ய எல்லையைப் பகிரும் பெலோருசியா என்ற சோவியத் குடியரசின் தலைநகரான மின்ஸ்க் பேராயராக தடேயுஸ் கொஸ்ருசிவிக்ஸ் (வயது 43) நியமிக்கப்பட்டுள்ளார். 1981 இல் குருவாகிய இவர் 8 வருடங்களில் ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 63 வருடங்களில் இக்குடியரசிற்கு உரோமையால் நியமிக்கப்பட்ட முதல் ஆயர் இவர். 1927இல் இக்குடியரசில் உரோமையால் நியமிக்கப்பட்ட ஆயர் சிறைப்படுத்தப்பட்டார். போலந்துடன் வத்திக்கான் ராஜதந்திர உறவுகளைப் புதுப்பித்த முதல் வாரத்தில் இந்நியமனம் தரப்பட்டமை,கொம்யூனிஸ்டு நாடுகளுடன் திருச்சபை எதிர்காலத்தில் கொள்ளவிருக்கும் உறவுக்கு அறிகுறி,

### முதற் சந்தர்ப்பம்

கொம்யூனிச நாடுகளில் சமய விடுதலைக்குக் காரணியாயிருந்த ரூசிய தலைவர் கோர்பச்சேவ் எதிர்வரும் நவம்பர் மாதம் இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இச்சமயம் இவர் வத்திக்கானுக்கு விஜயம் செய்து திருத்தந்தையைச் சந்திப்பார். இதுவே சோவியத் தலைவர் திருத்தந்தையைச் சந்திக்கும் முதல் சந்தர்ப்பம்.

## தூரதர்ஷனில் வேதாகமம்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க வேதாகம நிகழ்ச்சிகளை இந்திய தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கு அதிகாரிகள் இணங்கியுள்ளனர்.

கேரளதயாரிப்பாளர்களான ''நவோதயம்'' இதைத் தயாரிக்கவிருக்கின்றது. 39 நிகழ்ச்சிகளைக்கொண்ட இத்தொடரைத் தயாரிக்க 4 கோடி ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சில காட்சிகள் பாலஸ்தின, எகிப்து ஆகிய இடங்களிலும் படமாக்கப்படும். ஜேம்ஸ் அரசர் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டே இது தயாரிக்கப்படும். வேதாகம வரலாறுமுழுவதையும் இதனுள் அடக்கமுடியாதாகையால் பழைய, புதிய ஏற்பாடுகளின் முக்கிய நிகழ்ச்சிகளே படமாக்கப்படும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் 45 நிமிட நேரம் நீடிக்கும்.

டிசம்பர் அல்லது ஜனவரியில் இத்தொடர் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கத்தோலிக்க பாடசாலை மீது தாக்குதல்

குஜராத்திலுள்ள வடோதரா என்னுமிடத்திலுள்ள யேசுமரி பெண்கள் பாடசாலையிலுள் ஜூலை 5-ம் திகதி சுமார் 300 காடையர் நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இப்பாடசாலையில் 1-ம் வகுப்பிலிருந்து 12-ம் வகுப்பு வரை ஏறத்தாழ 1700 மாணவியர் கல்வி பயில்கின்றனர். இவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோது ''இந்து தர்மம் வெல்க'' எனக் கோஷமிட்டபடி உட்புகுந்த காடையர்கள் மாணவியருக்குப் பலவந்தமாக வளையலும் பொட்டும் அணிவித்தனர். அதிபரின் அறையுட் புகுந்து தம் விருப்பத்தின்படி கடிதமொன்றுக்குக் கைச்சாத்திடச் செய்தனர்.

பின்னர் குஜராத் முதலமைச்சருக்கு அதிபர் எழுதிய முறையீட்டில் அக்காடையர் தம்மையும், ஏனைய ஆசிரியரையும், பெற்றோர் – ஆசிரியர் சங்க உறுப்பினரையும், அச்சுறுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.'' எமது பாடசாலையில் பல மதத்தவரும் கற்கின்றனர். இச்செயல் இனத்துவேஷத்தை வளர்ப்பதற்கென்றே மேற்கொள்ளப்பட்டதாகும்'' என அவர் மேலும் கூறியுள்ளார்.

தற்போது பாடசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. அந்நகரிலுள்ள ஏனைய நான்கு கத்தோலிக்க பாடசாலைகளும் ஜூலை 10-ம் திகதியன்று அனுதாபத்துக்கு அடையாளமாக ஒரு நாள் மூடப்பட்டன.

## இந்திய கத்தோலிக்க வெளியீடுகள் 292 இல் 4 தினசரிகள் 3 வாரஏடுகள்

இந்திய கத்தோலிக்க அச்சக சங்கம் இந்தியாவில் வெளிவரும் கத்தோலிக்க ஏடுகளைப் பற்றி ஓர் ஆய்வு நடத்தியுள்ளது. ஜூன் 11ம் திகதி முடிவுற்ற ஆய்வின்படி நான்கு கத்தோலிக்க தினசரிகள் உள்ளன. ''தீபிகா'', ''கேரள டைம்ஸ்'',''மலாபார் மெயில்'' ''சாதுவார்த்தா'' என்னும் இந்நான்கும் கேரளத்தில் மலையாள மொழியில் வெளிவருபவை. ஆங்கிலத்தில் வெளிவரும் வார ஏடுகளான ''தி எக்ஸாமினர்'' ''த ஹெரல்ட்'' ''த நியூ லீடர்'' ஆகிய மூன்றும் முறையே பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் பிரசுரமாகின்றன.

இந்த ஏடுகளில் பெரும்பாலானவை சமய சம்பந்தமானவை. சில சமூக - அரசியல் சம்பந்தமானவை. சில இளைஞர்களுக்குரியவை.

மொத்தம் 292கத்தோலிக்க வெளியீடுகளுள் 95 கேரளத்தில் பிரசுரமாகின்றன. அடுத்ததாக தமிழ்நாட்டில் 92ம்,கர்நாடகத்தில் 24உம், ஆந்திராவில் 23உம் பிரசுரமாகின்றன. வட இந்தியாவில் மஹாராஷ்டிராவில் 28உம், பீகாரில் 12உம், உத்தரபிரதேசத்தில் 9உம்,மத்தியபிரதேசம் மேற்கு வங்காளம் ஆகியவற்றில் தலா ஏழும், டெல்லியில் ஆறும் வெளிவருவதாக ஆய்வில் காணப்படுகின்றது.

## குருவாக மாறிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம் பலமேடு என்னும் இடத்துக்கு யாத்திரை செய்தவர்களைக் குழப்புவதற்காக இரவில் அங்கு இரகசியமாகச் சென்று கற்பூரத்தை எரித்து மக்கள் காண்பதற்குக் காத்திருந்த மகரஜோதி என்னும் ஒளி பொய்யானது என நிரூபிக்க முயன்றவர். ஆத்திரம் கொண்ட மக்களால் வதைபட்டாலும் அவர் தமது கொள்கையை விடவில்லை.

மீன்பிடித் திணைக்களத்தில் ஓர் எழுதுவினைஞராக தொழில் புரிந்த இவர் நீண்டகரை என்னும் பாலத்தின் மேல் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தபோது ஒரு லொறியுடன் மோதி படுகாயமுற்றார். அவர் உயிர் பிழைப்பதே அரிதாயிற்று. (மாதக் கணக்காக அவரது உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தபோது) திருவனந்தபுரம் வைத்தியசாலையில் அவரது தாய் கண்ணீரும் கம்பலையுமாக அவர் அருகில் செபித்துக் கொண்டிருந்தாள்.

ஈற்றில் அவர் உயிர்பிழைத்தெழுந்தபோது உலகம் அவருக்குப் புதிதாகத் தோன்றியது. தனது வாழ்க்கையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானார். பிரபஞ்சத்தை வழிநடத்தும் ஒரு மேலான சக்தி உண்டென்பதை உணர்ந்தார். வேதாகமத்தைக் கற்பதில் தமது நேரத்தைக் கழித்தார். தமது வேலையிலிருந்து விலகி குருத்துவ கல்வி கற்கத் தொடங்கினார். 1987 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

## புனித இஞ்ஞாசியாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகள் இவ்வாண்டு செப்டெம்பர் 27 ஆம் திகதி ஆரம்பித்து 1991 ஜூலை 31 ஆம் திகதி முடிவடையும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
பதிவு இல: QB/ 1001/ 58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org